விவரங்கள்.	தொடர் எண்.	வழங்கப்பட்ட இடருதவித் தொகை.
		ரூ.
2. வேறிடத்தில் குடியிருந்த 4 குடிசைச் சொந்தக்காரர்களுக்கு (குடிசையை மீண்டும் கட்டிக்கொள்வதற்காக) ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 60 வீதம்		240 00
3. வாடகைக்குக் குடியிருப்பவர்கள் 214 பேருக்கு (துணி மானியத்திற்காக) குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ 20 வீதம்		4.280 00
மொத்தம்		16,840 00

தீ விபத்தினல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளூர் உயர்நிலைப் பள்ளியில் தற்காலிக இடவசதி அளிக்கப்பட்டது. மாநகராட்சி அதிகாரிகளால் அவர்களுக்கு உணவும் அளிக்கப்பட்டது.

(4) அறிக்கைகள் அளித்தல்.

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1972-ம் ஆண்டு, தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை பேரவையின் முன் வைத்துள்ளேன்.